செ.வெ. எண்: 457 நாள்: 02–08–2012

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க**
**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள்**
**சென்னை மத்திய கூட்டுறவு வங்கியில் பல ஆண்டுகளாக உதவியாளர்களாக பணிபுரிபவர்களுக்கு உதவி மேலாளராக பணிநிலை மாற்றம் செய்து ஆணையினை வழங்கி , தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில்**
**இணையதள வங்கிச் சேவை (Net-Banking) மூலம்**
**மின்கட்டணம் செலுத்தும் வசதியினை தொடங்கி வைத்தார்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.**செல்லூர் கே.ராஜு** அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மத்திய கூட்டுறவு வங்கியில் 1987 முதல் 1993 வரையிலான காலத்தில் உதவியாளர்களாக பணியமர்த்தப்பட்டவர்களில் 156 பணியாளர்கள் பதவி உயர்வு பெறாமல் உதவியாளராகவே பணிபுரிந்து வந்தவர்களுக்கு உதவி மேலாளராக பணிநிலை உயர்வு ஆணையினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் 2.8.2012 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

அதன்படி, மேற்கண்ட உதவியாளர்களின் பணிநிலை, உதவி மேலாளர் (பதவி உயர்வு) என்று மறு பெயரிட்டு அதற்கேற்றாற்போல் 5% அடிப்படை ஊதியம் அதிகரித்து உதவி மேலாளர் சம்பள விகிதத்தில் சம்பளம் பெற்று, மாதம் ஒன்றுக்கு ரூ.1300/– கூடுதலாக ஊதியம் பெறுவார்கள். இந்த ஆணையின் மூலம் 156 பணியாளர்கள் பயன்பெறுவார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், சென்னை மத்திய கூட்டுறவு வங்கி 2010–2011 ஆம் நிதி ஆண்டில் சுமார் ரூ.61/– கோடி இலாபம் ஈட்டினாலும் பணியாளர்களுக்கு பதவி உயர்வு மற்றும் பணிநிலை மாற்றம் இல்லாதிருந்த நிலை தற்போது அகற்றப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாமல், சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டினை விரிவுபடுத்தி, மக்களுக்கு சேவை புரிந்திட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் வங்கி காப்பீட்டு திட்டம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

சென்னை மத்திய கூட்டுறவு வங்கி, அதன் கிளைகளின் மூலம் இப்கோ–டோக்கியோ–வின் பொதுக் காப்பீட்டு பாலிசிகளை விற்பனை செய்வதற்கான கூட்டாண்மை உரிமத்தை (Corporate Licence) பெற்று இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் காப்பீட்டு பாலிசிகளை புதுப்பித்துக் கொள்ளவும், துவங்கவும், விபத்து காப்பீட்டு திட்டமாக இவ்வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு ரூ.30/– பாலிசி எடுத்து ரூ.1,00,000/– வரை ஒரு வருடத்திற்கு விபத்து காப்பீட்டு பாலிசி பெறலாம் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அதே போன்று நகைக் கடன் மற்றும் இதரக் கடன் பெறுவோர் ரூ.539/–ஐ செலுத்தி ஒரு வருடத்திற்கு ரூ.8,00,000/– வரை விபத்து காப்பீட்டு பாலிசிகளை பெறலாம் இவ்வங்கி 3 இலட்சம் வாடிக்கையாளர்களுக்கு இந்த புதிய காப்பீட்டு வசதிகளை இதன் மூலம் அளிக்கும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.**செல்லூர் கே.ராஜூ** அவர்கள் அறிவிப்பின்படி, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில் இணையதள வங்கிச் சேவை கடந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சேவை மூலம் தமிழகத்தின் அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்கள் உடனடி பணப் பரிமாற்றங்கள் செய்து கொள்ள இயலும். தற்போது இந்தச் சேவை தனி நபர் வாடிக்கையாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வங்கியின் வாடிக்கையாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

நவீன வங்கித் தொழில்நுட்பமான இணையதள வங்கிச் சேவை (E-Banking) நடைமுறைக்கு வந்த பிறகு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்கள் முதற்கட்டமாக இணையதள வங்கிச் சேவை வாயிலாக மின் கட்டணம் செலுத்தும் வசதியை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதற்கான ஒப்பந்தம், தமிழ்நாடு மின்சார வாரியத்தோடு ஏற்படுத்திக்கொண்டதன் அடிப்படையில் இன்று (2.8.2012) மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கன் முன்னிலையில் இந்தச் சேவை துவக்கி வைக்கப்பட்டது. இந்தச் சேவையின் வாயிலாக, வாடிக்கையாளர்கள் எவ்வித சேவை கட்டணமும் இன்றி மின் கட்டணத்தை தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் இணையதள வங்கிச் சேவை வாயிலாக செலுத்தி அதற்கான இரசீதினை அச்சுப் படிவம் எடுத்துக் கொள்ளலாம்.

கூட்டுறவு வங்கிகளிலேயே இச்சேவையை வழங்கிடும் முதல் வங்கியாக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி திகழ்கிறது.

இதுபோன்று மேலும் பல சேவைகளை மக்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கைகள் எடுக்கும்படி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் வங்கி அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் திருமதி.எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.ப.அண்ணாமலை, இ.ஆ.ப., வங்கியின் கூடுதல் பதிவாளர்/தனி அலுவலர் திரு. எம்.பி. சிவன் அருள் மற்றும் கூடுதல் பதிவாளர்கள், திரு.ஆர்.ராஜேந்திரன், திரு.அ.சங்கரலிங்கம், திரு.இரா.கார்த்திகேயன், திரு.ஆர்.எம்.ஜெயம்பாண்டியன் மற்றும் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**